கல்கி

KALKI 2.5.2004 ரூ.6.00

ராகுல் 'ஜன்ம' பூமி!

-அமேதி ஸ்பாட் ரிப்போர்ட்

காத்தோடு போன
மாத்தாடு மல்லிகே!

இணைப்பு...

ஆள் பாதி; ஆடை மீதி!

மினி கல்கி

அனிமேஷன் அஞ்சலி

சிறுமி, கே. புவனேஸ்வரி குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் தீவிர ரசிகை. 'கோகுலம்' பாலர் இதழுக்கு, கதை, கவிதை, கட்டுரைகள் எழுதி, 'கோகுலம் மாணவர் அட்டை' பெற்றவர். வளர்ந்து பெரியவளானதும், எம்.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்து, 'காம்கேர் சாஃப்ட்வேர்' என்னும் கம்ப்யூட்டர் நிறுவனத்தை நடத்தி வருகிறார். தமிழில் வெளிவரும் ஒரு கம்ப்யூட்டர் மாத இதழின் ஆசிரியர், காம்கேர் பதிப்பக உரிமையாளர், தமிழ் சாஃப்ட்வேர் தயாரிப்பாளர் என, பல்வேறு முகங்கள் கொண்ட புவனேஸ்வரிக்கு, நீண்ட நாளாக ஓர் ஆசை. தான் எழுத்தாளராகவும், பதிப்பாளராகவும் உயர உதவிய ஆசான் அழ. வள்ளியப்பாவுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, அவரது பாடல்களை சி.டி.யில் கொண்டு வர வேண்டும் என்பதுதான். அது சமீபத்தில் நிறைவேறியிருக்கிறது.

'மியாவ், மியாவ் பூனையார்', 'எட்டுக் கோழிக் குஞ்சுகள்', 'குரங்குக் கூட்டம்' போன்ற பொறுக்கு மணி பாடல்களை, உயிரோட்டத்துடன் அனிமேட் செய்திருக்கிறார். வண்ண வண்ண கார்ட்டூன்களின் ஜீவனுள்ள வடிவங்கள், குதூகலிக்க வைக்கும் இசை, உற்சாகமானத் தொகுப்பு, என எல்லாமே பளீரெனத் தாக்கி கண்கள் விரிய வைக்கின்றன.

"இயந்திரமயமாகிவிட்ட வாழ்க்கையில், சந்தமும், நீதியும் கொண்ட அழகு தமிழ்ப் பாடல்களை, குழந்தைகளுக்குச் சொல்லித்தர பெற்றோர்களுக்கு நேரமிருப்பதில்லை. தற்கால பெற்றோர்களுக்கு அதிக அளவில் கதைகளும் பாடல்களும் தெரியாது. அந்தக் குறையைப் போக்கவே, இந்த 'பேரன் பேத்தி பாடல்கள்' சி.டி." என்கிறார் கே. புவனேஸ்வரி.

குழந்தைகளுக்கு பொழுது போக இதைவிடப் பயனுள்ள வழி இருக்கா?

- ஐஸ்